**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

Mcop 159/2024

ம.சா2 குமார்

| | |
|---|---|
| Name | : குமார் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 26.03.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த மனுவின் 3ம் நபர் ஆவேன். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

1. என்னுடைய ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் மூ.த.சா.ஆ 1.

3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து சம்பந்தமாக காவல்துறைக்கு யார் தகவல் கொடுத்தது என்றால் நான் தான் கொடுத்தேன். பெரியசாமி தகவல் கொடுத்தாக கூறியுள்ளது தவறு என்றால் அவரும் கொடுத்துள்ளார். யார் கொடுத்த தகவலின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் பெரியசாமி கொடுத்த தகவலின் பேரில் பதிவு செய்யப்பட்டது. நான் காவல்துறைக்கு போன் மூலம் தான் சொன்னேன். என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் காவல்துறைக்கு போன் மூலம் தகவல் சொன்னதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பெரியசாமி இறந்து போன கணேசனின் மகன் என்றால் சரிதான். பெரியசாமி என்ன தகவல் சொல்லியுள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பெரியசாமி கொடுத்த தகவலில் கணேசனும் அவரது மனைவியும் 3 வருடமாக சேர்ந்து வாழவில்லை என சொல்லியுள்ளார் என்றால் சொல்லியுள்ளார். கணேசன் ரோட்டில் கிடக்கும் காலிபாட்டில்களை எடுத்து கடையில் போட்டு பிழைப்பு நடத்தி வருவதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். கணேசனின் வருமானத்தை நம்பி மனுதாரர்கள் வாழவில்லை என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து

அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். பெரியசாமி சொன்னதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக வேறு நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரர்களுக்கும், எனக்கும் ஒரே ஊர்காரர்கள், உறவினர்கள் என்றால் எனக்கு வேண்டப்பட்டவர்கள் ஆவார்கள். விபத்தில் ஈடுபட்ட லாரி என்ன வகையான லாரி , பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. விபத்தை நான் பார்க்கவில்லை என்றும், பெரியசாமிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி (முழு பொ)
தென்காசி.